செ.வெ.எண்: 538/2019 நாள்: 25.10.2019

**திருவண்ணாமலை பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகளுடன் கட்டப்பட்டு வரும் ஆயுஷ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு...**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை பழைய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில், இன்று (25.10.2019) இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை மூலமாக 2018-2019 ஆம் ஆண்டு ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கை வசதிகளுடன் புதியதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனை கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் (பொ) மரு. சகீல்அகமது, இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு. சுகுணா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. மீரா, மருத்துவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை பழைய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் புதியதாக 50 படுக்கைள வசதிகளுடன் ஒருங்கிணைந்த ‘ஆயுஷ்’ மருத்துவமனை கட்டடம் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் 02.03.2019 முதல் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே, சென்னை அண்ணாநகர், அண்ணா வளைவு அருகில் ஒருங்கிணைந்த ‘ஆயுஷ்’ மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் முதல் முறையாக திருவண்ணாமலை மற்றும் தேனி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ‘ஆயுஷ்’ மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகிய சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டு வரும் ‘ஆயுஷ்’ மருத்துவமனையின் மொத்த தரை பரப்பளவு 744.14 ச.மீ. (8007.05 ச.அடி.) ஆகும். இக்கட்டடத்தில் தரை தளத்தில் யோகா அறை, வரவேற்பு, மருத்துவ பதிவு அறை, நுழைவு வாயில், பதிவுறை, விபத்து சோதனை, உணவகம், ஆண் நீராவி குளியல், சிகிச்சை அறை, பெண் நீராவி குளியல், சமையல் அறை, குளியல் அறை மற்றும் கழிவறை, டாம்கால் அறை, முதல் தளத்தில் இயற்கை சிகிச்சை முறை (ஆண்கள் மற்றும் பெண்கள்), தயாரிப்பு அறை, பதிவு அறை, மருத்துவமனை மேற்பார்வை அறை, மருத்துவ ஆய்வகம், புள்ளியில் துறை, கழிவறை மற்றும் குளியலைற, இரண்டாவது தளத்தில் கூட்ட அரங்கம், கண்காணிப்பாளா் அறை, காத்திருப்பு அறை, சித்தா வார்டு (ஆண் மற்றும் பண்), மருத்துவா் மாற்றும் அறை, ஊழியா்கள் மாற்று அறை, அறுவை அரங்கம், நிா்வாக அலுவலகம், கழிவறை மற்றும் குளியலறை, மூன்றாவது தளத்தில் கூட்ட அரங்கம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், நிா்வாக அலுவலகம், அலுவலக அறை, கழிவறை மற்றும் குளியலறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் ‘திருவண்ணாமலை பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ‘ஆயுஷ்’ மருத்துவமனை கட்டுமானப் பணிகள் இன்று ஆய்வு செய்யப்பட்டது. ஆயுஷ் மருத்துவமனை 50 படுக்கைகளுடன் யுனானி, சித்தா உட்பட்ட அனைத்து பிரிவுகளுக்கும் தனி வார்டுகள், மருத்துவர்கள், மருந்தகங்களுடன் கட்டப்பட்டு வருகிறது. இப்பணிகளில் அடுத்த 3-4 மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். மேலும், பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் முதுகு தண்டுவடம் பாதித்தவர்களுக்கு (Spinal Cord Injury) குறுகிய காலம் தங்கும் மையம் (Short Stay Centre) அமைப்பதற்கான இடம் முதல் கட்டமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 60-70 நபர்கள் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அடுத்தவர்கள் உதவியுடன் தான் எந்த பணிகளையும் செய்ய முடியம். முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும் படுக்கை புண்கள் (Bed Sore) இம்மையம் மூலம் அனைத்து மருத்துவ வசதிகளுடன் முழுமையான சிகிச்சை அளிக்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இதற்கான மையம் பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலமாக செயல்படுத்துவதற்கான முதல் கட்டமான ஆய்வு பணிகள் இன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது’ என்றார்.

இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் செங்கம் சாலை, சண்முகா தொழிற்சாலை மேல்நிலைப் பள்ளி அருகில் உள்ள சந்திப்பு, போளூர் சாலை, ஈசான்ய மைதானம் அருகில், அண்ணா நுழைவு வாயில் சந்திப்பு, நகராட்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ரவுண்டானா சந்திப்பு, காஞ்சி சாலை, அபய மண்டபம் சந்திப்பு, ஆகிய சந்திப்புகளை முன்னேற்றுவதற்கும், மேம்படுத்துவற்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து முதல் கட்டமான ஆய்வினை மேற்கொண்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**